**செய்தி வெளியீடு எண்:091** **நாள்: 16.02.2017**

**<u>பொதுத் (தேர்தல்கள்–1) துறை</u>**

# <u>செய்தி வெளியீடு</u>

இந்தியத் தேர்தல் ஆணையத்தின் ஆணைப்படி 01.09.2016 அன்று வெளியிடப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியலிலுடன் தொடங்கிய 01.01.2017–ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்ட சிறப்பு வாக்காளர் பட்டியல் சுருக்கமுறைத் திருத்தம், 05.01.2017 அன்று வெளியான இறுதி வாக்காளர் பட்டியலுடன் நிறைவு பெற்றது. இந்த சிறப்பு வாக்காளர் பட்டியல் சுருக்கமுறைத் திருத்தம், தமிழ் நாட்டில் உள்ள 232 தொகுதிகளுக்கு மட்டுமே நடைபெற்றது. தமிழ் நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல், 2016–ன்போது இந்தியத் தேர்தல் ஆணையத்தால் தேர்தல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 134.அரவக்குறிச்சி மற்றும் 174. தஞ்சாவூர் சட்டமன்றத் தொகுதிகளில் சிறப்பு வாக்காளர் பட்டியல் சுருக்கமுறைத் திருத்தம், 2017 அச்சமயம் நடைபெறவில்லை.

2, தற்போது 134.அரவக்குறிச்சி மற்றும் 174. தஞ்சாவூர் சட்டமன்றத் தொகுதிகளுக்கு சிறப்பு வாக்காளர் பட்டியல் சுருக்கமுறைத் திருத்தம், 2017 நடத்துவதற்கான கீழ்க்கண்ட அட்டவணையை இந்தியத் தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது

| நடவடிக்கைகள் | நாள் |
|---|---|
| **வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் நாள்** | **20.02.2017** |
| பெயர் சேர்க்க/ நீக்க/ திருத்த மனுக்கள் அளிக்க கால அவகாசம் | 20.02.2017 முதல் 06.03.2017 வரை |
| கிராம சபை / உள்ளாட்சி மன்றம் மற்றும் குடியிருப்போர் நலச் சங்கக் கூட்டங்களிலும், வாக்காளர் பட்டியல் படித்தல் மற்றும் சரிபார்த்தல் | 25.02.2017 (சனிக்கிழமை) |
| மனுக்கள் பெற சிறப்பு முகாம் நாட்கள் | 26.02.2017 (ஞாயிற்றுக்கிழமை) மற்றும் 05.03.2017 (ஞாயிற்றுக்கிழமை) |
| **இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் நாள்** | **16.03.2017 (வியாழக்கிழமை)** |

வாக்காளர் பட்டியல் திருத்தத்திற்கான இவ்வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு மேற்கண்ட இரு சட்டமன்றத் தொகுதிகளின் பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**தலைமைத் தேர்தல் அதிகாரி**
**தமிழ்நாடு**

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.9**